**வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2017**

---

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரம்) 213 ஈ (5) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் உரிய உத்தியோகத்தர்களினால் உரித்து கோரப்படாத ரூபா 512,665 தொகையான ஊக்குவிப்புப்படி மற்றும் அப்பணத்தில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 481,707 தொகை என்பன பொறுப்புக் கணக்கின் மூலம் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானச் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா 30,958 இனால் அதிகரித்தும் பொறுப்புக்கள் சமனான அளவால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்குரியதாக பல்வேறு விடயங்களின் காரணமாக செலுத்தப்படாத ரூபா 719,265 கூட்டுத்தொகையான ஊக்குவிப்புப்படி அவ்வாண்டின் செலுத்த வேண்டிய செலவினமாக இனங்காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பதவியணியினரின் விளையாட்டு, களியாட்ட நடவடிக்கைகள், நலன்புரி நடவடிக்கைகளுக்காக நிதியத்தால் 2016 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட தொகையிலிருந்து மீளக் கிடைத்த ரூபா 50,000 தொகை திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காகச் செலுத்துவதற்குள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களை தீர்த்து வைத்ததன் பின்னர் எஞ்சுவது மிகையொன்றாயின் அதனை தாமதமின்றி திரண்ட நிதியத்திற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தில் காணப்பட்ட ரூபா 2,686,700 தொகையான மிகை அவ்வாறு திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிதியத்தின் கணக்குகள் ஒப்பீடு செய்யப்பட்டு செயல்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்கான அறிக்கையும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் (வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம் கட்டளை 3 (ஈ) ஆம் பந்தியின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பதவியணியினர் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக செலுத்த வேண்டிய ஆகக்கூடிய தொகை வருடமொன்றிற்கு ரூபா 100,000 ஆகக் காண்பிக்கப்பிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 364,640 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,686,700 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,692,728 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,028 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்படு நிலையும் மீளாய்வும்

மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 23 (ஈ) பிரிவின் கட்டளை இலக்கம் 3 இன் பிரகாரம் அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றாமல் நிதியத்தின் பெறுவனவுகளில் 92 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் தயாரித்தல், மாற்றுதல், உற்பத்தி செய்தல், ஒன்றிணைத்தல், புதிதாக வடிவமைத்தல், பதிலீடு செய்தல், நிறத்தை மாற்றுதல் மற்றும் வடிவமைப்பை மாற்றுதல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள நபர்கள் தொடர்பான தகவல்களை வழங்குகின்ற தரப்பினர்களுக்கு வெகுமதிப் பணம் செலுத்துதல்.

(ஆ) ஏதாவது பிழையான செயற்பாடுகளை கண்டறிவதற்காக தகவல்களை வழங்குகின்ற அல்லது அவ்வாறான பிழையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வெகுமதிப் பணம் செலுத்துதல்.

(இ) மெச்சக்கூடிய அல்லது விஷேட மதிப்பீடொன்றின் தேவைக்கான திணைக்களத்தின் பதவியணியினர்களின் செயற்பாடுகளுக்காக வருடமொன்றிற்கு ரூபா 50,000 இனை விஞ்சாத வெகுமதிப்பணம் செலுத்துதல்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிதியத்தால் அமுல்ப்படுத்தப்படுகின்ற ஊக்குவிப்பு முன்மொழிவுத் திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்புப்படி முன்மொழிவுத் திட்டத்திற்கு முரணாக திணைக்களத்தின் 06 பிரிவுகளுக்கு ஊக்குவிப்புப்படி கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தேசத் திட்டத்தின் கீழ் பிரதான செயலாற்றல்களுக்கு 03 குறிகாட்டிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் 11 பிரிவுகளில் ஊக்குவிப்புப்படி கணிப்பீடு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஊக்குவிப்பு நிதியத்தின் செயல் நடவடிக்கைகளுக்காக அபிவிருத்திப் பிரிவின் மேலதிக அல்லது பிரதி ஆணையாளரின் கீழ் மூன்று பேர்களையுடைய குழுவொன்று நியமித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்மொழிவுத் திட்டத்தின் 8.7 ஆம் பந்தியின் பிரகாரம் ஊக்குவிப்படி முன்மொழிவுத் திட்டம் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒரு தடவை மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உத்தேசத்திட்டம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மீளாய்விற்கு உட்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்கான உத்தேசத் திட்டத்தின் 5.8 ஆம் பிரிவிற்கு முரணாக ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் பூர்த்தி செய்யப்படாத வேலைகள் காணப்பட்ட 03 பிரிவுகளுக்காக மீளாய்வாண்டின் iv ஆவது காலாண்டிற்கான ஊக்குவிப்புபடி செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கபப்ட்டது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தால் 2017 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | ஊக்குவிப்புப்படி சரியாக கணிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | வங்கிக் கணக்குகளுக்காக தனித்தனியாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமை. |